# ★ அலம்பில் - செம்மலையில் அகோர யுத்தம்

[யாழ்ப்பாணம்]
அலம்பில்-செம்மலை பகுதிகளில் முன்னேறிய ஆயிரக் கணக்கான படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் சமர்புரிந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
பெரும் தொகையான படைகள் கடற்பகுதியால் குவிக்கப்பட்டு மும்முனைத் தாக்குதலுக்கு மத்தியில் புலிகள் சடும்
[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 28 இதழ் 120
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10 - 06 - 1992

## முல்லை. மோதலில் 4 படையினர் பலி

[கொழும்பு]
முல்லைத்தீவுப் பகுதியில் தொடரும் உக்கிர மோதலில் நேற்று நான்கு படையினர் கொல்லப்பட்டும் 12 படையினர் படுகாயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரி
[4-ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி முழுவதும் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)
வடபகுதி முழுவதும் இன்று காலை 8 மணி முதல் கால வரையற்ற ஊரடங்கு அமுல் படுத்தப்படுவதாக கூட்டுப் படை தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.
வவுனியா மாவட்டம், மன்னார்தீவு, யாழ் குடாநாட்டில்
[4-ம் பக்கம் பார்க்க]

# ★ திருமலை - மன்னாரில்
# ரோந்துப்படைகள் மீது அதிரடி
# 17 படையினர் உயிரிழந்தனர்

(யாழ்ப்பாணம்)
**திருமலை, மன்னார் மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை நடத்திய இரு வேறு அதிரடித் தாக்குதல்களில் 17 இராணுவத்தினர் பலியானார்கள் பலர் படுகாயமடைந்தனர். பல நவீன ரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

திருமலை மகிந்தபுர இராணுவ முகாமிலிருந்து அரிப்புச் சந்திக்கு நேற்றுக்காலை 7-10 மணியளவில் ரோந்து வந்த நாற்பதிற்கும் மேற்பட்ட படையினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் திடீர அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது பதினொரு நவீனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ரி. 56 ரக துப்பாக்கி-5, ரி. 56 இரண்டு ரக துப்பாக்கி-4, ரி. 81 ரக துப்பாக்கி-2, ரி. 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்-30, ரி. 81 ரக
(4-ம் பக்கம் பார்க்க)

## பத்துப் புலிகள் வீரச்சாவு

[திருகோணமலை]
திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் நேற்றுக் காலையில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் 10 புலிகள் வீரச் சாவு அடைந்தனர்.

திருகோணமலை மோதலில் வீரச் சாவு அடைந்தோர் விபரம்: மேஜர் வெற்றிச்செல்வன் அல்லது கெரில்லா (அழகையா
[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். தாக்குதலில் படையினர் திணறல்

(கொழும்பு)
தெல்லிப்பழை பகுதி படையினருக்கு பரிச்சயமில்லாத புதிய பிரதேசமாதலால் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட முடியாதிருப்பதாக கேர்ணல் சரத்முனசிங்க கூறியுள்ளார்

புதிய படையணிகள் ஆதலால் நிலைமைகளை அவதானிக்கவேண்டிய நிலை இருப்பதாகவும் புலிகளின் கடும் எதிர்ப்பால் படையினர் பலத்த சிரமங்களை எதிர் நோக்கவேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## யாழ்ப்பாணம் வர தொண்டா முயற்சி

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் அழைத்தால் யாழ்ப்பாணம் சென்று அவர்களுடன் பேச்சு நடத்த தாம் தயாராயிருப்பதாக
(4-ம் பக்கம் பார்க்க)

## 10 நாள் போரில் 110 ராணுவம் பலி

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் கடந்த 10 நாள் போரில் 110 படையினர் கொல்லப்பட்டும் 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துமுள்ளதாகவும் இராணுவ பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு-முல்லைத்தீவு-யாழ்ப்பாணப்பகுதி மோதலிலேயே இவர்களில் பெருமளவினர் கொல்லப்பட்டதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார். (சி)

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்திய சாலையில் நீண்ட காலமாக ஏற்பட்டுவரும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக்கூறுமுகமாக பணிப்பாளர் தலைமையில் ஐவர்கொண்ட தூதுக் குழுவினர் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
[4ம் பக்கம் பார்க்க]

## 300 செயற்கை அவயவம் யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கை அவயம் பொருத்தும் நிறுவனத்திற்கு முன்னூறு செயற்கை அவயங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

செயற்கை அவயவங்களை
(4ம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் 5 தமிழர் கைது

(கொழும்பு)
நீர்கொழும்பு பகுதியில் 5 யாழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் இப்பகுதியில் சுமார் 50 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

## போரா? சமாதானமா? அரசுக்குள் குழப்பநிலை

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வுக்கு இராணுவ நடவடிக்கையா அல்லது சமாதானப் பேச்சு வார்த்தையா என்றதொரு குழப்பமான நிலையில் தற்போது அரசு இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமது சுயநல நோக்கிற்காக தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் அதனை பயன்படுத்த முனைவதால்தெரிவுக்குழுவின்முடிவை அவை எவ்விதத்தில் ஏற்றுக் கொள்ளும் என்பதும் தற்போது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் அகப்பட்டிருந்த பிராங் கொடடையைச் சேர்ந்த முருகையா 60 வயது) என்பவர். படையினரால் சுடப்பட்டு இறந்ததாகவும், பின்னர் படையினராலேயே சடலம் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## நம்பிக்கையில்லா பிரேரணை மீண்டும் தோல்வி

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் எம். எச். முகம்மதுக்கு எதிரான இரண்டாவது நம்பிக்கையில்லாப்பிரேரணையும் 50 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 68 உறுப்பினர்களும் எதிராக 118 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

மேற்படிபிரேரணைக்குஆதரவாக ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி,
(4ம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கை குறித்து பலாலியில்தளபதிகள்மாநாடு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் பதில் பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க தலைமையில் மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் கூட்டுப்
[4-ம் பக்கம் பார்க்க]

# சமாதான நீதிபதியால் உறுதிப்படுத்தும் கடவுச்சீட்டு விண்ணப்பபடிவம் நிராகரிப்பு

(மானிப்பாய்)

சமாதான நீதிபதியினால் உறுதிப் படுத்தப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதென திருப்பிவிடப் படுகின்றது

இதுபற்றி அறிகையில்; கடவுச்சீட்டைப் பெறுவதற்கு விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மூன்றும் பக்கத்தில் இலங்கை அரசாங்க சிவில் நிரல் உத்தியோகத்தர் அல்லது சமாதான நீதிபதி அல்லது தகைமை பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் அல்லது சட்டத்தரணி யாரேனும் ஒருவரினால் உறுதிப்படுத தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநேகமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் சமாதான நீதிபதியினாலேயே தமது விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்தி இதுவரையும் கடவுச்சீட்டைப் பெற்றுவந்தனர்.

ஆனால் கடந்த சில வாரங்களுக்கு முன் சமாதான நீதிபதியினால் உறுதிப்படுத்திய குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு சென்ற பலரது விண்ணப்பங்கள் ஏற்கமறுக்கப்பட்டு திருப்பிவிடப்பட்டதாம்.

இதுபற்றி காரணம் கேட்டபோதே சமாதான நீதிபதியினால் உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் இனிமேல் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் டாக்டர் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் உறுதிப்படுத்திக்கொண்டு வாருங்கள் என கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## வரி விளம்பரம்

### நோவுவைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவுஎண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6256)

### பிரயோக கணிதம்

க. பொ. த. (உ. த.) படிமுறைப் பயிற்சி நூல்கள்: 1. காவியும் அதன் பிரயோகங்களும், 2. நிலையியல் பகுதி 1 ஆகியனவும், 3. மாதிரி வினாத் தாள்களும், விடைகளும் விற்பனையாகின்றன. ஆசிரியர்: சி. துரையப்பா, B Sc., (சிறப்பு), M. Sc., (Eng.) (சி 6388)

### ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்''

சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது. ''மீரா'' பிரசுரங்களில் இணைக்கப்பட்டிருக்கும் ஐந்து கூப்பன்கள் சேர்ந்ததும் மீரா விற்பனையாளரிடம் கொடுத்து ரூபா 50/- பெறுமதியான மீரா நாவலை அன்பளிப்பாக பெறுங்கள். (சி-6408)

## உலர் உணவு விநியோகம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் யூன் மாதத்துக்குரிய உலர் உணவு விநியோகம் நாளை 11-ந் திகதி ஆரம்பமாகும் என சங்கப் பொதுமுகாமையாளர் திரு ஜெயராசா தெரிவித்துள்ளார். (சு)

## அடையாள அட்டைப் படிவங்கள்'

(மானிப்பாய்)

யாழ்.ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் 20 000விண்ணப்பப்படிவங்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன. (71)

## உபசமாஜம்

(பண்டத்தரிப்பு)

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக பிரிவு சன சமூக நிலையங்களின் உப சமாஜம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (72)

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் இடமாற்றம்

(மானிப்பாய்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது மானிப்பாய் பட்டின சபை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. (71)

## ''கிராம முன்னேற்றத்திற்கு கல்வி அவசியம்''

[வட்டுக்கோட்டை]

''பின்தங்கிய கிராமங்கள் முன்னேறவேண்டுமானால் அங்குள்ள மக்கள் அனைவரும் கல்வி கற்கவேண்டும். மதுவுக்குச் செலவு செய்யும பணம் கல்விக்குச் செலவு செய்யப்படவேண்டும்.''

வட்டுக்கோட்டை துறட்டிப்பனை நல்லொழுக்க சங்கம், வடபிரதேச நல்லொழுக்கச் சம்மேளனத்தின் ஆதரவுடன் துறட்டுப்பனையில நடத்திய மதுவிலக்கு கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு கூறினர்.

வட்டுக்கோட்டை துறட்டிப்பனை நல்லொழுக்கச் சங்கத் தலைவர் திருமதி க. தனபாக்கியம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. டிவகலாலா தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

''கிராமங்களில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் கல்வி கற்காது தொழில் துறைகளில் ஈடுபடுவதாலேயே அக்கிராம மக்கள் பின்தங்கிவிடுகின்றனர். கிராம முன்னேற்றத்திற்கு கல்வி அவசியம் என்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

நடனம், நாடகம், பாட்டு முதலான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. (139)

## பிறந்த தின வாழ்த்து

### செல்வி லேனகா துரைராஜா

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையைச் சேர்ந்த துரைராஜா - சந்திரா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி லேனகா தனது முதலாம் வருட பிறந்த தினத்தை இன்று (10-6-1992) தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சாள்மார், சுவிஸ்லாந்து அண்ணர்மார், அத்தான், சவுதி அண்ணன் ஆகியோர் கடுக்காய் வைரப்பா அருளால் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை. பெற்றோர் (சி-6404)

## இராசிபலன்

10-06-1992

புதன்கிழமை

(தமிழுக்கு வைகாசி 28)

தசமி பி. இ. 12-54 வரை: அத்தம் மு. ப. 8-34 வரை: சித்தயோகம், இராகுகாலம் காலை 11-52 முதல் 1-22 வரை சுபநேரம் மாலை 4-22 முதல் 5-52 வரை.

மேடம்: பந்து வருகை, விருந்துண்ணல், பண வரவு.

இடபம்: ஆரோக்கியக் குறைவு, கடிதத்தொல்லை, மறதி.

மிதுனம்: பெரியோர் கோபம், அலைச்சல், தடுமாற்றம்.

கடகம்: பல காரிய சிந்தை, ஆடம்பரப் பிரியம், குடும்ப சுகம்.

சிங்கம்: பயணக் கெடுபிடி: வாக்குக் கலகம், காரியதடை.

கன்னி: தொழில் லாபம், அதிக யோசனை, புதிய முதலீடு.

துலாம்; சுபகாரியச்செலவு, சகோதர உதவி, மனமகிழ்ச்சி.

விருச்சிகம்; தொழில்சிறப்பு வஸ்திர லாபம். தானதர்மம்.

தனுசு: குடும்ப நன்மை, நற்செய்தி, விருந்துவைபவம்.

மகரம்: அடிமை நிலை, தவறான செயல், சினம் கொள்ளல்.

கும்பம்: குடும்பபகை, கருத்து வேறுபாடு, சஞ்சலம்.

மீனம்; மாமியார் கொடுமை, வாக்கு வன்மை, பகைவர் உதவி.

—ஜோஸ்யர்

## மலேரியா மருந்துகள் தட்டுப்பாடு

[கொழும்புத்துறை]

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மலேரியா நோய்க்குப் பயன் படுத்தப்படும் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குளோரோகுயின், பிறிமாகுயின் எனப்படும் இரு மலேரியாக் குளிசை வகைகளைப் போதுமான அளவு யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. (154)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத் தினம்

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம்: 11-06-1992 வியாழக்கிழமை காலை 10 மணி.

பிரதமவிருந்தினர்: திரு.க.பரமேஸ்வரன் அவர்கள் (பதிவாளர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

பரிசில் வழங்கல்:

திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர், முன்னாள் ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.)

அதிபர், ஆசிரியர், மாணவர்.

யாழ். இந்துக்கல்லூரி, 09-06-1992 (எ-2203)

## அறிவித்தல்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்இயங்கி வந்த பாலம்பொதுப் பணிமன்றம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் ஏதும் இருப்பின் 15-06-92க்கு முன்னர் 83/2, காங்கேசன் துறை வீதி, கொக்குவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நேசன்
நிர்வாகி

10-06-92. (சி-6409)

உ

## திருமண அழைப்பு

அன்புக்குரியீர்,

நிகழும் எழில் வருஷமாம் ஆங்கீரச ஆண்டில் இனிய வைகாசித் திங்கள் 29-ம் நாளில் (11-06-1992) வியாழன் காலை 7-22 இலிருந்து 11 மணி வரை மங்கலம் மலிந்திடும் மாண்புறுவேளையில்,

எமது ஏக புத்திரன்
திருநிறைச் செல்வன்
அருந்தவநாதன் B.A.(Hons)
(விரிவுரையாளர், யாழ்-கல்லூரி)

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
பூங்கொடி B.A.(Hons)
(ஆசிரியை, நடேஸ்வரக் கல்லூரி)

இருவர் கரங்களும் உயர்ந்தோர் ஏத்திட உற்றார் வாழ்த்திட நல்லைப்பதியின் ஞானசம்பந்தர் ஆதீன அரங்கினில் இணைய இருப்பதால், மென்மலர் தூவி மனதால் வாழ்த்த நும்மை அழைக்கிறோம்.

வரவேற்புபசாரம்: 13-06-1992 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

வரவை விரும்பும்

அ. பொன்னுத்துரையும்பாரியாரும்,
175, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

கே. வி. இராசரத்தினமும் பாரியாரும்,
சோதி வீதி,
காங்கேசன்துறை.

(இரு வீட்டார் அழைப்பு) (சி-6407)

## யாழ். மாநகரசபை பொது அறிவித்தல்

### யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான சத்திரச்சந்தைப் பகுதிக்குள் சேதமடைந்த கடைகளுக்கான இட ஒதுக்கீடு

தற்போது சத்திரச்சந்தைப் பகுதிக்குள் மாநகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகள் ஏற்கனவே இப்பகுதியில் கடை வைத்திருந்து சேதமாக்கப்பட்டதன் காரணமாக கடைகளை இழந்த மாநகரசபையின் அனுமதிபெற்ற வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு கொடுபடவுள்ளது. இவ்வாறு உரிமைகோரும் விண்ணப்பதாரர் தாம் அனுமதி பெற்ற யாழ். மாநகரசபை வாடகைக்குடியிருப்பாளர் என்பதனை நிரூபிக்கும் வகையில் உரிய ஆவணங்கள், அடையாள அட்டை ஆகியவற்றுடன் 16-6-92 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு மின்சார நிலைய வளவிலுள்ள மாநகரசபை உப அலுவலகத்திற்கு தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ். மாகரசபை

1992-06-09. [ஏ-2205]

# 3000 ரூபா கோடி வங்கி மோசடியால் இந்திய பொருளாதாரத்தில் நெருக்கடி

[புதுடில்லி]

இந்தியாவில் நடைபெற்ற வங்கி மோசடியால் இந்தியாவின் பொருளாதாரம் வருங்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட இருக்கிறது என்று உலகப்பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிடுள்ளார்கள்.

1969-ம் ஆண்டு இந்திய வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டபோது காலஞ்சென்ற முதுபெரும் அரசியல் ஞானியான ராஜாஜி அதை மிகவும் வன்மையாக எதிர்த்தார்.

அரசு மிகப்பெரும் தவறை செய்கின்றது. வங்கிகளை அரசு பொறுப்பேற்றுல் லஞ்சம், ஊழல்கள் மலிந்து பெரும் மோசடிகள் நடைபெறக்கூடும், பிற்காலத்தில் இதை, ஒரு போதும் திருத்த முடியாத நிலைஏற்பட்டுவிடும் என்று ராஜாஜி கூறினர். இதை அன்று பல அரசியல்வாதிகள் எதிர்த்தார்கள் ராஜாஜி ஒரு 'முதலாளி வர்க்கத்தின் தோழன்' என்று வசைமொழிகளும் கூறினர்கள் 20 வருடங்களுக்கு முன்பு ராஜாஜி கூறியது, தற்போது உண்மையாகி விட்டதை இந்திய அரசும், அரசியல்வாதிகளும் இன்று உணர்ந்துள்ளார்கள்.

1969-ம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவில் உள்ள 14 பெரிய வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து 1980-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், மேலும் 6 வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை வங்கிகளின் நிர்வாகத்தில், செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளின் தலையீடு இருந்து கொண்டு வந்துள்ளது. வங்கிகள் அரசுடமையாக்கப்பட்ட பின்பு, லஞ்சம் ஊழல்கள் பெருமளவில் தலைவிரித்து ஆடியது. பொது மக்களின் பணம் இது. இதை நாம் நேர்மையாகவும், கண்ணியமாகவும், கடமையுணர்வுடனும் கையாளவேண்டும் என்ற உணர்வும், வங்கி அதிகாரிகளுக்கு ஏற்படாமல் போனதே இந்தளவுக்கு பெரிய பணமோசடிகள் நடைபெறுவதற்கு காரணம். இதைவிட வங்கிகளில் பதவி நியமனங்கள் நடைபெறும் போது அரசியல்வாதிகளுக்கு பதவிகள் வழங்கப்பட்டுவந்துள்ளது.

ஆண்டுக்கு ஒருமுறை வங்கிகளின் கணக்குகளை சரிபார்க்க வேண்டுமென்று நியதி, இருந்த போதிலும் பல வருடங்களாக வங்கிகளின் கணக்குகள்சரிபார்க்கப்படவில்லை இது போன்ற தவறுகளினுலேயே ஆசியாவில் உள்ள எந்த ஒரு நாட்டு வங்கிகளிலும் நடைபெறுத மிகப்பெரிய பணமோசடி இந்தியாவில் நடைபெற்றுள்ளது.

ராஜீவ் காந்தி பிரமராக இருந்து போது அவரின் ஆட்சியை நடுநடுங்க வைத்த 80 கோடி ரூபா போபஸ் பீரங்கி ஊழல் மோசடியை விட தற்போது நடைபெற்ற வங்கி மோசடி 3 ஆயிரம் கோடி ரூபா எனக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடியின் முக்கிய சூத்தரதாரியான 'ங்குத் தரகர் திரு. ஹர்ஸத் மேத்தாவும் (38 வயது) அவர் சகபாடிகள் ஒன்பது வங்கி அதிகாரிகளும் மற்றும் 21 பேரும் ரகசியப் பொலிஸாரினுல் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்கள் இந்த நிலையிலும் அரசு சரியானதும் நேர்மையானதுமான விசாரணைகளை நடாத்தி தகுந்த பரிகாரம் தேடாது விட்டால் உலக நாடுகளின் சந்தையில் இந்தியாவின் பொருளாதாரம் வருங்காலத்தில் பெரும் பாதிப்படைவதை யாராலும் தடுதது நிறுத்த முடியாது என்ற பொருளாதர நிபுணர்கள் மேலும் கருத்து தெரிவித்துள்ளார்கள். [வி]

## பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஒன்பது வருடங்களாக ஆசிரியராகவும் பின் உப அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறிய திரு. சு. பாலசிங்கத்தை கௌரவிக்கும் முகமாக இன்று காலை கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் பிரிவுபசார விழா நடைபெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இவ்விழா அதிபர் எஸ். சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 10ம் தேதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. மகேசனும் பிரதம விருந்தினராக வட்டு. கொத்தணி அதிபர் சி. டாஸனும் கலந்து கொள்வார்கள்.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9-30 மணிக்கு ஆங்கிலத் தினம் கொண்டாடப்படும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினுல் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து தென்மராட்சி பகுதிகளில் தஞ்சமடைந்திருக்கும் மக்களின் போஷாக்கு உணவு, சுகாதாரம், மருத்துவம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்று இன்று புதன்கிழமை சென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக்குழுவின் ஏற்பாட்டில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றம் இன்று 10-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் "1980க்குப் பின் வங்கித் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள்" பற்றிய கருத்தரங்கு ஒன்றினை நடாத்கவுள்ளனர்.

## ஜெயலலிதாவுக்கு 'சிரோன்மணி' விருது

[புதுடில்லி]

பல்வேறு துறைகளிலும் சிறந்த சாதனைகள் செய்தமைக்காக வழங்கப்படும் 'சிரோன்மணி' விருது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு செல்வி ஜெயலலிதாவை சிறந்தபெண்ணுக தெரிந்தெடுத்து அவருககு 'மகிழார் சிரோன்மணி' விருது வழங்க புதுடில்லியிலுள்ள 'சிரோன்மணி' அமைபபு முடிவு செய்துள்ளது.

இன்று இவ்விருதை உப-ஜனுதிபதி திரு. சங்கர் தயாள் சர்மா புதுடில்லியில் வழங்குவார். இவ்விருதை ஜெயலலிதா சார்பில் தமிழக பிரதிநிதி ஒருவர் பெறுவார் எனவும் தெரிவிக்கபபடுகிறது. [சி]

## நேர்முகப் பரீட்சை

(மானிப்பாய்)

எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் மேலும் 15 பேருக்கு 8ந் திகதி யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. (71)

## குவைத் நஷ்டஈடு விண்ணப்பித்தோர் தொகை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் வேலையிழந்து நஷ்டஈடு கோரி விண்ணப்பித்தவர்களின் தொகை இது வரை 1200க்கு மேல் உயர்ந்துள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று 10ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் பின்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புத் திணைக்களத்திற்கு, இந்த விண்ணப்பங்கள் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்படுமென்றும் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (வி)

ஆஸ்பத்திரிகளில்

## படிவங்கள் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதர பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும், அரசினர் மத்திய மருந்தகங்களிலும் வெளி நோயாளரை பார்வையிட்டு டாக்டர்கள் மருந்து எழுதிக் கொடுக்கும் படிவங்கள், வார்ட்டுகளில் நோயாளர்களை அனுமதிப்பதற்கு பயன்படுத்தப்படும் படிவங்கள், மற்றும் பதிவேடுகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க அலுவலகத்தில் இரத்தப் பரிசோதனை செய்வதறகான தினப் பதிவேடுகளுக்கும் மற்றும் முக்கிய படிவங்களுக்கும் தட்டுப்பாடு நிலவிவருகிறது. (72)

## விபத்தில் மரணம்

(கொழும்புத்துறை)

கடந்த மாதம் 17-ம் திகதி மோட்டார் சைக்கிளினுல் மோதுண்ட 74 வயது வயோதிபர் கடந்த 5-ம் திகதி மரணமானுர்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த திரு ஆ. கைலாசபிள்ளை என்பவரே இறந்தவராவார். இவரை மோதிய மோட்டார் சைக்கிள் மாயமாய் ஒடிமறைந்து விட்டது. படுகாயங்களுடன் யாழ் பெரியாஸ்பத்திரியில் அவசரசிகிச்சைப்பிரிவில் இவர் அனுமதிக்கம்பட்டிருந்தார். இறந்தவர் பிரபலசமய, சமூக சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (154)

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு: வர்மா கமிஷன் அறிக்கை 15ம் திகதி கையளிக்கப்படும்

(சென்னை)

முன்னுள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட வர்மா கமிஷன் தனது அறிக்கையை உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானிடம் இம்மாதம் 15ம் திகதி கையளிக்கவுள்ளது.

ராஜீவ்காந்தி கொலையுண்ட போது பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதும் குறைபாடுகள் இருந்தனவா என்பதற்காகவே வர்மா கமிஷன் நியமிக்கப்பட்டது.

இரண்டு தொகுதிகளைக் கொண்ட இந்த அறிக்கை தயாராகிவிட்டது என இக் கமிஷனின் செயலாளர் தெரிவித்தார்.

சென்ற மாதம் 4ம் திகதி வர்மா கமிஷன் தனது விசாரணையை முடித்துக் கொண்டது. (கே)

வலி வடக்கில்

## இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒருவார நிவாரணம்

(காங்கேசன்துறை)

வலி-வடக்கில் கடந்தவாரம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்த அகதிகளுக்கு ஒரு வார விசேட இலவச நிவாரணம் வழங்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சந்திரராஜா மேற்கொண்டார். தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், அளவெட்டி-மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்திலும் இந்த நிவாரணம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (86)

## ஊனமுற்ற பெண்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள ஊனமுற்ற பெண்களுக்குப் பல்வேறு தொழிற்பயிற்சிகளையும், பயிற்சித்திட்டங்களையும் ஊனமுற்ருேர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தி வருகின்றது.

தற்போது கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள ஊனமுற்ருேர் பணிமனைத் தொழிலகததில் ஊனமுற்ருேருக்கான தையற் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றது.

ஊனமுற்ருேர் பயிற்சி பெறும்வரை தங்குவதற்கான விடுதி வசதிகள் இங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அத்துடன் வறிய பெண்கள் தினமும் தையல்பயிற்சி பெற்றுச்செல்லவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது. (154)

## மண்ணெண்ணை முத்திரை வழங்கக் கோரிக்கை

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட உணவு முத்திரை பெறும் குடும்பங்கள் மண்ணெண்ணை முத்திரை வழங்குமாறு கிராம உத்தியோகத்தர்களிடமும் உதவி அரசாங்க அதிபடரிமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரண முத்திரைகள் பெறும் பெருப்பாலான குடும்பங்களுக்கு மின்சாரம் இருக்கின்றது என்பதனுல் முன்னர் மண்ணெண்ணை முத்திரை வழங்கப்படவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக மின்சார விநியோகம் தடைப்பட்டிருப்பதனுல் இவர்கள் தங்களுக்குமண்ணெண்ணை முத்திரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (137)

## ★ இந்திய வங்கி மோசடி 31 பேரின் சொத்துக்களை மத்திய அரசு சுவீகரித்தது

[புதுடில்லி]

இந்தியாவில் பங்கு மார்க்கெட் ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள இந்திய றிசேவ் வங்கி ஆளுநர் உட்பட 31 பேரின் சொத்துக்களை அரசு சுவீகரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இது குறித்து ஜனுதிபதியால் பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்தின் கீழ் இந்த 31 பேரின் பல கோடி ரூபா பெறுமதியான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் நேற்று முன்தினம் அரசால் சுவீகரிக்கப்பட்டது.

இந்தச் சொத்துக்களுக்குத் தணிக்கை கட்டுப்பாட்டுத் துணை அதிகாரி காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அரசுக்குச் சேரவேண்டிய 3000 கோடி ரூபா இந்தச் சொத்துக்களிலிருந்து மீட்கப்படவுள்ளது.

3000 கோடி ரூபாவிற்குமேல் வங்கிகளிடமிருந்தும், நிதிநிறுவனங்களிடமிருந்தும் திரு. ஹர்சத் மேத்தா என்பவரும் மற்றும் 30 பேரும் பங்குகள் வாங்க பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பங்கு மார்க்கெட் ஊழலில் சம்பந்தப்பட்ட யாராகவிருந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாதென பிரதமர் திரு. நரசிம்மராவ் கூறியுள்ளார். இந்தப்பிரச்னையில்ஏதும் மறைக்கப்படமாட்டாது என்றும் எவரையும் பாதுகாக்க அரசு முயலாதென்றும் அவர் கூறியுள்ளார். [சி]

# கொழும்பு முகாம்களில் இனி இடமில்லையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அகதிகளுக்கு இனிமேல் கொழும்பில் அகதி முகாம்களில் இடமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பகுதி அகதிகள் இனிமேல் தங்கள்பகுதிகளுக்கு அருகிலுள்ள அகதி முகாம்களிலேயே தங்கவேண்டுமெனவும் சமூகசேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

பம்பலப்பிட்டி கோயில், விவேகானந்த சபை கட்டடத்தில் ஏற்கனவே தங்கி இருப்போர் தொடர்ந்தும் தங்கியிருக்க இடமளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## தபாலகங்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கியதும், சமீபத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்ததுமான தெல்லிப்பழை, காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகங்கள, இன்று தொடக்கம் சுன்னாகம் பட்டினப் பகுதியில் இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அஞ்சல் அலுவலகம் சுன்னாகம் — கந்தரோடை வீதியில நடராசா வைத்தியசாலைக்கு அண்மையிலும், காங்கேசன்துறை அஞ்சலகம் சுன்னாகம் மின்சார சபைச் சந்திக்கு அருகிலுள்ள தனியார் இல்லத்திலும் இயங்கும்.

## இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து அளவெட்டி - மல்லாகம் பகுதியில் தங்கியிருப்பவர்களுக்கு விசேட இலவச நிவாரணம் இன்று முதல் வழங்கப்படவுள்ளது. (56-86)

# மீனவர் சடலங்கள் கடலிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதிவுக்கடல் பிராந்தியத்தில் கடந்த ஞாயிறு இரவு கடற்படையினரால சுடப்பட்ட இரு மீனவர்களின் சடலங்களும் நேற்று கடலிலிருந்து மீட்கப்பட்டன.

குருநகரைச் சேர்ந்த ஐயாத்துரையேசுதாசனின் (வயது 21) சடலம் நேற்றுக்காலை 7 மணியளவிலும், மயிலிட்டியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை மரியநாயகத்தின் சடலம் பகல் 11 மணியளவிலும் கடலில் மிதந்து வருவதைக் கண்ட மீனவர்கள் சடலங்களை கடலிலிருந்து மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தார்கள். (வீ-56-154)

# தபால்பொதி வருகை மாற்று ஏற்பாடு செய்க

(யாழ்ப்பாண )

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாற பொதிகளைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கும், கொழும்பில் உள்ள தபாற் பொதிகளை இங்கு கொண்டுவருவதற்கும் மாற்று நடவடிக்கையை மேற்கொண்டு தருப்படி, யாழ். மாவட்டத் தபால் அத்தியட்சகர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளார்.

இனிமேல் மாதம் ஒரு தடவையே பருத்தித்துறைக்குக் கப்பல் வரவுள்ளது.

தபாற் பொதிகளைத் தாமதமின்றிக் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்துதரும்படி, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்கப்பட்டுள்ளது (வி)

# கூட்டுறவு சங்கம் உடைக்கப்பட்டு கொள்ளை

[காங்கேசன்துறை]

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுசசங்கத்தின் 4-ம் இலக்க கிளை நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

தெல்லிப்பழை விராங்கொடையில் அமைந்திருந்த இக்கிளை நிலையம் இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்டிருந்த சமயத்தில் இனந்தெரியாதவர்கள் அதனை உடைத்து அங்கிருந்த சகல பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [86]

# 15,000 விவசாயிகளுக்கு கெயர் 3-ம் கட்ட உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 15000 விவசாயிகளுக்கு கெயர் நிறுவனத்தால் விவசாய உற்பத்தி பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

3-ம் கட்டமாக யாழ். மாவட்டத்தில் கெயர் நிறுவனத்தால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம், விதைகள், உரம், மண்ணெண்ணை, மண்வெட்டி போன்ற பொருள்கள் வழங்கப்படும்.

இது தொடர்பான கூட்டமொன்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

கெயர் நிறுவனம் ஏற்கனவே யாழ் மாவட்டத்தில் அமுல்படுத்திய இருகட்ட விவசாயத்திட்டங்களிலும் முப்பதினாயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

3-ம் கட்ட விவசாய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய உதவிப் பணிப்பாளர் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (வி!

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81

## அனுமதி அட்டைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கிராமசேவகர் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ். கல்வித திணைக்களத்துக்கு நேற்று மாலை வந்து சேர்ந்துள்ளன.

இப்பரீட்சை இம்மாதம் 13ம திகதி ஆரம்பமாக உள்ளது. இதற்கான விணுத்தாள்கள் இன்னும் இரண்டொரு தினங்களில் யாழ். மாவட்டத்துக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (சு)

### போரா? சமாதானமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அரசின் சமாதான முயற்சியும், இராணுவ நடவடிக்கையும் ஒரு குழப்பநிலையில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### நம்பிக்கையில்லா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐக்கியசோசலிசஸ முன்னணி, ஆகிய கட்சிகளைச்சேர்ந்த உறுப்பினர்களும், தமிழர்விடுதலைக்கூட்டணியை சேர்ந்த உறுப்பினர்களும் வாக்களித்தனர். (க)

### கொழும்பு பயணம்

[1-ம பக்கத் தொடர்ச்சி]

பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், வைத்தியக் கலாநிதி திரு சிவகுமாரன், கணக்காளர் திரு. சபாநாதன் உட்பட ஐவர் கொண்டகுழு சுகாதார வைத்தியசாலைகள் அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தையினை நடாத்தஉள்ளது. (56)

### 300 செயற்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து எடுத்துவருவதற்கு ஸ்ரீலங்கா அரசு இரண்டு வருடங்களாக தடைவிதித்திருந்ததன் பின்னர் முதல் தடவையாக இச்செயற்கை அவயங்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

செயற்கை அவயங்கள் வந்து சேர்ந்துள்ளதால் நூற்றுக்கணக்கானோருக்கு செயறகைக் கால்கள் பொருத்தும் பணி ஆரம்பமாகியுள்ளன.

### வடபகுதி முழுவதும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படையினரின் கட்டுப்பாடுகள் தவிர்ந்த வடமாகாணத்தின் அனைத்துப்பகுதிகளிலும் இவ் ஊரடங்கு அமுலபடுததப்படும் எனவும் கூட்டுப்படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது

படை நடவடிக்கை மேற்கொள்ளும பொருட்டே ஊரடங்கு அமுலாவதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவிததுள்ளது. (க)

### படை நடவடிக்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படைத் தலைமை தளபதி ஹமில்டன் வனசிங்க இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன, டென்சில் கொப்பேகடுவ, யாழ். மாவட்ட தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ண மற்றும் படை தளபதிகளும் கலந்து கொண்டனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற படை நடவடிக்கையை அடுத்து, மீண்டும் நடைபெறவுள்ள படை நடவடிக்கை குறித்து, தளபதி டென்சில் கொப்பேகடுவ வரை படம் மூலம் விளக்கி கூறினுர்.

இதையடுத்து அமைச்சர் அமரதுங்க, தளபதி ஹமில்டன் வனசிங்கா சகிதம் தீவுப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். பின்னர் ஊர்காவற்றுறை, காரைநகர், நயினுதீவுப் பகுதிகளுக்குச் சென்று கடற்படை, இராணுவமுகாம்களைப் பார்வையிட்ட பின்னர், அன்று மாலையில் அமைச்சர் கொழும்பு திரும்பினுர். [சி]

## ராஜேஸ்கன்னு வெற்றி

[புதுடில்லி]

புதுடில்லி தொகுதிக்கு நடைபெற்ற லோகசபாவிற்கான தேர்தலில் நடிகர் ராஜேஸ்கன்னு வெற்றி பெற்றுள்ளார். [சி]

### பத்து புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோமேஸ்வரன்- கிளிவெட்டி, மூதூர்), லெப் மலையமான் அல்லது நந்தி (தேவதாசன் கங்காதரன் திருகோணமலை), 2ம் லெப். மறைமலை அல்லது விவேகன் ராசப்பு அன்ரனி -ஆலங்கேணி), 2ம் லெப். மணிமொழி (வல்லிபுரம் சகாதேவன் - திரியாய், லெப். அறிவுநம்பி (உருத்திரமூர்த்தி சிறிகாந்த்), லெப் தர்மராஜா (யோசேப் அன்ரனி அலெக்சாண்டர் - திருகோணமலை), வீர வேங்கை திருச்செல்வன் அல்லது காளிதாஸ் (வைரமுத்து சேரசேஸ்வரன் -சாம்பல்தீவு).

மன்னுரில் வீரச் சாவு அடைந்த புலிகள் விபரம்; மேஜர் ரவிசங்கர் [யூலியஸ் வின்சன்- மன்னுர்], லெப். அரவிந்தன் [வேதநாயகம் பிரான்ஸிஸ் விடத்தல்பளை], 2-ம் லெப். உதயச்சந்திரன் [ராமரமணி-திருகோணமலை].

### திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள்-9, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணிகலன்கள்-10, நடுத்தர ரவைகள் - 1371, தலைக்கவசம்-2, ஜே ஆர். கைக்குண்டு-1, சப்பாத்து 5 சோடி போன்ற பலஆயுதங்கள் இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, மன்னுரில் விடுதலைப் புலிகள் நடத்திய மற்றுமொரு தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டதுடன், பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

மன்னுர்-முருங்கன் வீதியில் வீதித் தடைகளை அகற்றுவதற்கு இராணுவத்தினர் வந்த போது, புலிகள் அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மன்னுர் சிறுநாவல் குளம் இராணுவ முகாமிலிருந்தும் வீதித் தடைகளை அகற்றச் சென்ற இராணுவம் மீது, புலிகள் தாக்குதல் நடத்தினுர்கள்.

இத்தாக்குதலில் ஏ. கே. இலகு இயந்திரத்துப்பாக்கி 1, இதற்குரிய ரவைக்கூடுகள் 8, ரி-56 இரண்டு ரகத் துப்பாக்கி - 1, ரி 86 ரகத் துப்பாக்கி 1. இதற்குரிய ரவைக் கூடுகள் 8, ரி 56 ஒன்று ரக துப்பாக்கி - 1, இதற்குரிய ரவைகூடு 8, நடுத்தர ரவைகள் 234, சப்பாத்து ஒரு சோடி, தலைக்கவசம் 2, ஜே. ஆர். கைக்குண்டுகள் 6, கோல்சர்கள் 2 போன்ற பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன- [ரி!

## கலந்துரையாடல்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காக மரங்கள் அதிக அளவில் சிரழிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றைத் தடுக்கு முகமாகவும் மழை காலங்களில் பாடசாலைகள பொதுஸ்தாபனங்கள், பொது அமைப்புகள் மூலம் நடுவது சம்பந்தமாகவும் இடம் பெறும் கலந்துரையாடல் கூட்டமொன்று நாளை 11ந் திகதி வியாழன காலை 10 மணிக்கு யாழ். செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (71)

## தையல் பயிற்சி

(கொழும்புத்துறை)

மட்டுவில் வேரக்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி ஆரம்ப வைபவம் இன்று புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு சங்கத் தலைவி செல்வி செ. இளி தலைமையில நடைபெறும். (104)

## கண்நோய் பரவுகிறது

(மானிப்பாய்)

மல்லாகம், அளவெட்டி பகுதிகளில் தற்பொழுது கண நோய் பரவி வருகின்றது.

### முல்லை மோதலில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டது.

முல்லைத்தீவு பகுதி மோதலில இதுவரை 30 படையினர் வரை கொல்லப்பட்டதாகவும் 54 படையினர் படுகாயமடைந்துள்ளதாகவும இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [சி]

### அலம்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்த் தாக்குதலை மேற்கொண்டு வருகினறனர்.

சுப்ப சோனிக விமானம், பொம்மர்-2, அவ்ரோ-2, ஹெலி-2 உட்பட பல விமானங்கள் ஓயாத குண்டு வீச்சுத் தாககுதல்களையும் மேற்கொண்டுவருகின்றன.

நேற்றைய சண்டையில் படையினருக்கும் பலத்த இழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [56]

### யாழ்ப்பாணம்

1ம-பக்கத் தொடர்ச்சி

அமைச்சர் தொண்டான் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இது குறித்து தமக்கு கடிதமூலம் அழைப்பு விடுத்தால் அதனை ஏற்று இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக அவர்களுடன் பேச்சு நடாத்துவேன் எனறும் திரு தொண்டமான் கூறியுள்ளார்.

கடந்த வருட பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வது பற்றி திரு. தொண்டமான் அடிக்கடி கூறிவருவதும் தெரிந்ததே. (சி)

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை வரதன்

அளவெட்டி வேளாவை வேலாயுதபிள்ளை வரதன் (கில்மன்/வேந்தன்) வீரமரணமானுர் அன்னர் திரு. செ. வேலாயுதபிள்ளை (முகாமையாளர். தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், வடபிராந்தியம்), திருமதி வனஜலோஜினி வேலாயுதபிள்ளை ஆகியோரின் ஏகபுதல்வனும், திருமதி வத்சலா பரமநாதனின் அன்புச்சகோதரனும், திரு. அ. பரமநாதன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை, யாழ்ப்பாணம்) அவர்களின் மைத்துனருமாவர்.

அன்னுரின் புகழுடம்பு 10-6-92 புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக அளவெட்டி மஹா ஜன சபை மண்டபத்தில் வைக்கப்பட்டு நல்லடக்கததுக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ. வேலாயுதபிள்ளை (தந்தை)

''திருவதிகை''
வேளாவை
அளவெட்டி

(சி-6410]